DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 5/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : டாக்டர்.பிரபாகரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் உதவி பேராசிரியராக ற பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.10.2012 ம் தேதி சங்கரன்கோவில் அரசு மருத்துமவனையில் பணியில் இருந்தபோது இரவு 9.15 மணிக்கு பிச்சைமுத்து என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் என்னிடம் தன்னை 15.10.2012 ம் தேதி மாலை 6.30 மணிக்கு முகம் தெரிந்த நபர் ஒருவர் சர்க் தெருவில் வைத்து கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது தாடை எலும்பில் 5x4 செமீ அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது .

2. வாயிலிருந்து ரத்தம் வழிந்து காணப்பட்டது.

நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவர் மேல்சிக்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் மற்றும் சிடிஸ்கேனை பார்த்ததில் அவரது வலது தாடை எலும்பு உடைந்து காணப்பட்டது. மேற்கண்ட மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட 1வது காயத்தை கொடுங்காயம் என்றும், 2வது காயம் சாதாரண காயம் என்றும் சான்று அளித்தேன். பிச்சைமுத்துவின் **காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இருசக்கரவாகனத்தில் காயம்பட்ட நபர் வேகமாக செல்லும்போது கீழே விழுந்தால் நான் முதல்விசாரணையில் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்க்பெற்ற காயம்பட்ட நபரின் நுண்கதிர் படம் மற்றும் சிடிஸ்கேன் ஆவணங்களை விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**